மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி.

**<u>அசல் வழக்கு எண். 167 /2024</u>**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் திருமதி. S.தனலட்சுமி Gr –III Bench Clerk என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : கண்ணன் ( வா.சா. 1 ) | சாதி : |
| த/பெ. | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

**<u>13.07.2026.</u>**

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் இந்த வழக்கின் 1ம் வாதி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள பிராதுவை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு அதன் படி எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

1). 27.01.1983 ம் தேதியிட்ட வாதிகள் வகையறா தபசில் சொத்துக்களை ஆணை அம்பலம் மகன் முத்து அம்பலத்துக்கு ரூ.2500/-க்கு ஈடுகடன் கொடுத்த பதிவு செய்யப்பட்ட பத்திரம் எண்.89/1983 ன் SRO நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2).** 02.07.1987 ம் தேதியிட்ட வாதிகள் வகையறா தபசில் சொத்துக்களை ஆணை அம்பலம் மகன் முத்து அம்பலத்துக்கு ரூ.1500/-க்கு ஈடுகடன் கொடுத்த பதிவு செய்யப்பட்ட பத்திரம் எண்.606/1987 ன் SRO நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3). 02.07.1987 ம் தேதியிட்ட மேற்படி ஈடுகன் தொகை ரூ.4000/-க்கு வட்டி கொடுப்பதாக வாதிகள் வகையறா எழுதிக்கொடுத்த வர்த்தமாக பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.3** ஆக ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

**4).** 10.12.2008 ம் தேதியிட்ட 1, 2 வாதிகளின் தாயார் அம்மாக்கண்ணு அம்மாளின் இறப்புச் சான்றிதழின் அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**5).** 05.09.2020 ம் தேதியிட்ட 1, 2 வாதிகளின் தாயார் அம்மாக்கண்ணு பெயரில் உள்ள பட்டா எண்.558 ன் அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**6).** 1ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7). 08.09.2020ம் தேதியிட்ட வாதிகள் தரப்பு வழக்கறிஞர் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீதுகளுடன் அலுவலக நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**8).** 1 முதல் 11 பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகளின் (எண்ணம்–11) அசல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**9).** 18.09.2020 ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை RDO அலுவலக ஓ.மு.ஆ.3/5463/2020 குறிப்பாணையின் சார்பு நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**10).** 18.06.2021 ம் தேதியிட்ட தபசில் 3 வது லக்க சொத்துக்கான அரசு வழிகாட்டி மதிப்பின் இணையதள நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**11).** 16.11.2010 ம் தேதியிட்ட சேது அம்மாள் இறப்பு சான்றுதழின் அசல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கோரிக்கையை ஏற்று குறுக்கு விசாரணை வேறொரு நாளுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**